ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2082/31 - 2018 අගෝස්තු මස 01 වැනි බදාදා - 2018.08.01
2082/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2018, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2018.05.08 ஆந் திகதிய 2070/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவில் மீன் மற்றும் 2018.06.14 ஆந் திகதிய 2075/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக தலபத்து மீன், கொப்பரா மீன் மற்றும் தோரா மீன்களுக்காக வெளியிடப்பட்ட உத்தரவு 2018, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, யூலை 31.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | விவரணம் | |
| 01. | 03.02 | மீன் புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் இறைச்சியையும் தவிர்ந்தவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | 03.03 | தலைப்பு 03.04 இன் கீழ்வரும் முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சியையும் நீங்கலாக ஏனைய மீன் குளிரால் உறையச் செய்யப்பட்டது | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |

08-564

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.